**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவிடைமருதூர்**

முன்னிலை: **திரு.நா.சிவபழனி, B.A., B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

2023 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20 ம் நாள் வியாழக் கிழமை,

**இ. ம எண்-22/2023 ல்அ.வ.எண்.48/2019**

1. டி.ஏ.ஜெயராமன்(வழக்கிற்கு பின் இறந்தார்)
2. கோதைநாயகி (இறந்தார்)
3. ராஜேந்திரன்
4. விஜயா(எ) விஜயலெட்சுமி
5. தமிழ்செல்வி
6. அறிவழகன்
7. அன்பழகன்
8. இளங்கோவன்
9. ரவிச்சந்திரன்
10. பொய்யாமொழி ..... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. மாணிக்கம் (இறந்தார்)
2. பேபி (எ) கலையரசி
3. பாலு
4. மனோகரன்
5. ராமச்சந்திரன் .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தால் கடந்த 19/01/2023 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.M.S.ரபேல்ராஜ்**,B.A.,B.L.,அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.R.பிரபாகரன்**,M.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் வழக்காவணங்கள் பரிசீலித்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 22 விதி 9 -ன் கீழ் இறந்துபோன 1ம் மனுதாரர்/பிரதிவாதியின் வாரிசுதாரர்களை பிரதிவாதிகளாக சேர்க்க கோரி உரிய

காலத்திற்குள் மனு தாக்கல் செய்யாததால் ஏற்பட்டுள்ள abatement உத்தரவை ரத்து செய்ய கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. மனுதாரர்கள் அசல் வழக்கின் வாதிகளாவர். அசல் வழக்கின் பிரதிவாதி/1ம் எதிர்மனுதாரர் கடந்த 08/12/2021 அன்று காலமாகிவிட்டதாகவும், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் வாரிசுகள் என்றும், அவர்களை மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டும் என்றும், 3ம் மனுதாரருக்கு கடந்த 01/03/2022 முதல் நெஞ்சு சளி அதிகமாகி கொரோனோ பாதிப்பு உள்ளதாக கருதி பழனிக்கு சென்று நாட்டு வைத்தியம்செய்து வந்ததால் பிரதிவாதியின் வாரிசுகளை2 முதல் 5 பிரதிவாதிகளாக சேர்க்க நடவடிக்கை எடுக்க இயலவில்லை என்றும், பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரப்பட்டுள்ளதால் மேற்படி இறந்துபோன 1ம் பிரதிவாதி/1ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்க வேண்டியது அவசியம் என்றும், எனவே 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் வாரிசுகளை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க கோரி உரிய காலத்திற்குள் மனு தாக்கல் செய்யாததால் ஏற்பட்டுள்ள abatement உத்தரவை ரத்து செய்ய கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு மற்ற எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையில், மனுதாரரால் கூறப்பட்டுள்ள விவரங்கள் சரியல்ல என்றும், மனுதாரர் இறந்த 1ம் எதிர்மனுதாரரின் வாரிசு விவரங்கள் சரியான முறையில் தெரிந்தும் வேண்டுமென்றே நீதிமன்ற காலத்தையும், நேரத்தையும் வீணடிக்கும் நோக்கத்தோடு இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி 2ம் எதிர்மனுதாரர் தேவி (எ) கலையரசியின் முகவரி சரியானதல்ல என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

3. இரு தரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டது.

5. ஆவணங்களை கண்ணுற்றதில், இம்மனுவை அனுமதிக்க எதிர்மனுதாரர்கள் தரப்பில் கடுமையாக ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டிருந்தாலும், மனுவில் குறிப்பிட்டுள்ள காரணங்களை பரிசீலித்தும், அசல் வழக்கில் பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்டங்களும் ஏற்பட போவதில்லை என்பதாலும், மாறாக இம்மனுவை அனுமதிக்க மறுக்கும் பட்சத்தில் மனுதாரர்களுக்கு அவர்கள் தரப்பு வழக்கை எடுத்துரைக்க வாய்ப்பு மறுக்கப்பட்டதாகிவிடும் என்பதாலும் நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**இறுதியாக இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இவ்வுத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின், இன்று (20/04/2023) இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**
**திருவிடைமருதூர்**

**இரு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**: இல்லை

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**
**திருவிடைமருதூர்**